## திருநெல்வேலி மாநகராட்சி

**2021ம் ஆண்டு ஜூலை மாதம் 07ம் நாள் புதன்கிழமை காலை 11.00 மணிக்கு திருநெல்வேலி மாநகராட்சி வ.உ.சி. கட்டிடத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

1) மத்திய அரசால் அம்ருத் நகரங்களை தேர்வு செய்து, நிர்பயா நிதியின் கீழ் (Nirbhaya Fund) மாநகரப் பகுதியில் பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு கருதிஇருள் சூழ்ந்த பகுதிகளில் மின்விளக்கு வசதியினை உரிய கட்டமைப்பு வழிகாட்டுதலுடன் (Nirbhaya Frame work guidelines) அமைத்துக் கொடுக்கும் பொருட்டு ரூ.20.00 இலட்சத்தினை ஒதுக்கீடு செய்து அதற்கான பிரேரணையினை (மாமன்றத் தீர்மான நகல், மதிப்பீட்டு நகல், உரிய வரைபடங்கள், விலை விபரப்பட்டியல்) போன்ற ஆவணங்களுடன் தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி சேவை கழக நிறுவனம், சென்னை (TUFIDCO) அனுப்பி வைக்குமாறு மேற்படி நிறுவனத்தின் கடிதம் எண் TUFIDCO/NIRBHAYA FUND/915/AM (B)/2019 நாள் 01.07.2021ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இம்மாநகராட்சியில் (1) குலவணிகர்புரம், (2) லெட்சுமி மகால் அருகில், (3) பார்வையிழந்தோர் பள்ளி அருகில், (4) உடையார்பட்டி வடக்கு கார்னர் பகுதி, (5) மாவட்ட அறிவியல் மையம் அருகில், (6) வண்ணார்பேட்டை பேராச்சியம்மன் கோவில் அருகில், (7) கரையிருப்பு, (8) சுத்தமல்லி வீட்டு வசதி வாரிய குடியிருப்பு அருகில், (9) அரசினர் பொறியியல் கல்லூரி அருகில், (10) போலீஸ் கண்ட்ரோல் அறை பின்புறம், (11) பாளை, தபால் நிலைய அலுவலகம் அருகில் (12) நூற்றாண்டு மண்டபம் சாலை (ஆதிதிராவிடர் மகளிர் விடுதி அருகில்) போன்ற இடங்களில் இரவு நேரங்களில் போதிய வெளிச்சம் இன்றி இருளாக இருப்பதால், பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு கருதி அப்பகுதியில் மின்விளக்கு வசதிகளை அமைத்துக் கொடுப்பதற்கு ரூ.20.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கான மதிப்பீடு நகல், மாமன்றத் தீர்மான நகல், வரைபடங்கள், விலை விபரப்பட்டியல் போன்ற ஆவணங்களுடன் பிரேரணையினை (Proposal) தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி சேவை கழக நிறுவனம், சென்னை (TUFIDCO) அனுப்பி உரிய நிர்வாக அனுமதியினை பெற்று மேற்படி பணியினை செயல்படுத்திடவும் மாமன்ற அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் குறிப்பிட்டவாறு, மத்திய அரசால் செயல்படுத்தப்படும் நிர்பயா நிதியின் கீழ் (Nirbhaya Fund) மாநகரப் பகுதியில் பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு கருதி இருள் சூழ்ந்த பகுதிகளில் மின்விளக்கு வசதியினை உரிய கட்டமைப்பு வழிகாட்டுதலுடன் (Nirbhaya Frame work guidelines) இம்மாநகராட்சியில் மேற்குறிப்பிட்ட 12 (பன்னிரண்டு) இடங்களில் இருள் சூழ்ந்த இடங்களில் புதிதாக மின்விளக்குகளை அமைத்துக் கொடுப்பதற்கும், தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி சேவை கழக நிறுவனம், சென்னை (TUFIDCO) அனுப்பி உரிய நிர்வாக அனுமதியினை பெற்று மேற்படி இருள் சூழ்ந்த இடங்களில் மின்விளக்கு வசதிகளை அமைத்துக் கொடுப்பதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 23:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(இ1/2127/2021)

---

2) திருநெல்வேலி மாநகராட்சியில் தச்சநல்லூர் மண்டலத்தில் கீழ்க்காணும் பணி மேற்கொள்ள ஒப்பந்ததாரரால் முன்வைப்புத் தொகை தச்சநல்லூர் மண்டலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை திரும்ப வழங்கக் கேட்டு ஒப்பந்ததாரர்

திரு.எஸ்.சுடலைமுத்து அவர்களால் 03.06.2019-ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | EMD (Rs.) | பதிவேடு விபரம் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண் 8, மாரியப்பன் கோவில் தெரு வடிகால் அமைத்தல் | 11,300 | தச்சநல்லூர் காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடு (2015-16) (2019-20) பக்கம் 15 |

அலுவலகக்குறிப்பு:

மேற்கண்ட விபரப்படி உள்ள முன் வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10000/-க்கு அதிகமாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii)-ன்படி தொகை ரூ.11,300/- மட்டும் ஒப்பந்ததாரர் திரு.எஸ்.சுடலைமுத்து அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 24:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ந.க.எண் இ1/481/21)

---

3) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு எண் 34, நபிநகர் பகுதியில் தெருவிளக்கு அமைக்கக் கேட்டு வரப்பெற்றுள்ள விண்ணப்பத்தின்படி அப்பகுதியில் ஏற்கனவே அமைந்திருக்கும் 3 எண்ணம் மின்கம்பங்களில் 3 எண்ணம் 20 W LED விளக்குகள் பொருத்திடவும் மற்றும் மின்வாரியப் பணிகள் மேற்கொள்ள தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்த வேண்டிய செலவு சேர்த்து மொத்தம் உத்தேச செலவினத் தொகை ரூ.30,000/- (முப்பதாயிரம் மட்டும்) செலவாகும். மாமன்றத்தின் அனுமதிக்க சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

மேற்கண்ட பொருளில் குறிப்பிட்டுள்ளஇடங்களில் ஏற்கனவே அமைந்துள்ள 3 எண்ணம் மின்கம்பங்களில் 3 எண்ண்ம் 20 W LED விளக்குகள் பொருத்திட ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.30,000/- (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 25:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ந.க.எண் இ1/1302/2021-மே.பா.)

---

4) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு எண் 34, பீடித் தொழிலாளர் காலனி பகுதியில் தெருவிளக்கு அமைக்கக் கேட்டு வரப்பெற்றுள்ள விண்ணப்பத்தின்படி அப்பகுதியில் ஏற்கனவே அமைந்திருக்கும் 2 எண்ணம் மின்கம்பங்களில் 2 எண்ணம் 20 W LED விளக்குகள் பொருத்திடவும் மற்றும் மின்வாரியப் பணிகள் மேற்கொள்ள தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்த வேண்டிய செலவு சேர்த்து மொத்தம் உத்தேச செலவினத் தொகை ரூ.25,000/- (ரூபாய் இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்) செலவாகும்.ளள மாமன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

மேற்கண்ட பொருளில் குறிப்பிட்டுள்ளஇடங்களில் ஏற்கனவே அமைந்துள்ள 2 எண்ணம் மின்கம்பங்களில் 2 எண்ண்ம் 20 W LED விளக்குகள் பொருத்திட ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.25,000/- (ரூபாய் இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 26:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ந.க.எண் இ1/1301/2021-மே.பா.)

---

5) திருநெல்வேலி மாநகராட்சியில் பாளையங்கோட்டை மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்ததாரரால் முன்வைப்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை திரும்ப வழங்கக் கேட்டு ஒப்பந்ததாரர் திருமதி.எம்.சிவகாமி அவர்களால் 19.06.2020-ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| Sl.No. | Name of work | EMD | Main Office Register details |
|---|---|---|---|
| 1 | Construction of Low Cost canteen W.No.15 | 10,000 | Palay Zone Lapsed 2013-14 P.No.4 |
| 2 | Construction of Low Cost canteen at MKP Hospital Campus | 10,000 | Palay Zone Lapsed 2013-14 P.No.7 |
| | | 20,000 | |

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட விபரப்படி உள்ள முன்வைப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10000/- ஆக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii)-ன்படி தொகை ரூ.20,000/- மட்டும் ஒப்பந்ததாரர் திருமதி.எம்.சிவகாமி அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 27:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

---

6) திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்தில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30-06-2008 பிற்பகல் முதல் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள திரு.எஸ்.முருகேசன் என்பவருக்கு அரசாணை எண் 408, நிதித்துறை நாள் 25-08-2009-ன்படி 01-01-1961-க்கு பின்னர் வரையறுக்கப்படாத பணி/தொகுப்பூதியம்/ மதிப்பூதியம் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து 01-04-2003-க்கு முன்னர் நிரந்தர அரசு பணியிடத்தில் ஈர்க்கப்பட்ட பணியாளர்களுக்கு மேற்படி பணிக்காலத்தில் பாதியை (50%) பணிக்காலத்துடன் சேர்த்து ஓய்வூதியப்பயன்கள் அனுமதிக்கத் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்கவும், மேலும் அரசுக் கடிதம் எண் 52717, நிதித்துறை, 2009-1, நாள் 23-10-2009-ன்படி நிரந்தரப் பணியில் ஈர்க்கப்படும் முன்னர் பணி முறிவு இருக்கும் நேர்வுகளில் அத்தகைய பணி முறிவை பொருட்படுத்தாது விடுவதற்கான (Condonation) ஆணைகளை சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் வழங்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி அரசாணை மற்றும் அரசு கடிதத்தின்படி வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில் திரு.எஸ்.முருகேசன் ஓய்வு பெற்ற வருவாய் உதவியாளர் வருவாய் துறையில் பணியாற்றிய மொத்த பணிக்காலத்தில் பாதியை (50%) கீழ்க்காணும் விபரப்படி (கலம் எண் 8-ல் குறிப்பிட்டுள்ளவாறு தகுதியான பணிக்காலத்துடன் சேர்த்து ஓய்வூதிய பயன்கள் அனுமதிக்க மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| வ எ ண் | பெயர் மற்றும் பதவி | பணிமுறிவு காலம் | திருநெல் வேலி மாநக ராட்சி யில் பணியில் சேர்ந்த நாள்: | ஓய்வு பெற்ற நாள் | மதிப் பூதியத் தில் பணிபுரிந்த காலம் (வட்டாட்சி யர்களிட மிருந்து பணிச் சான்று பெறப் பட்டு உள்ளது) | மொத்த பணிக் காலம் | ஓய்வூதிய பயன் களுக்கு எடுத்துக் கொள்ளு ம் பணிக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 | திரு. எஸ் முருகேசன், வருவாய் உதவியாளர் (ஓய்வு) | 14-07-1989 முதல் 21-02-1990 | 22-02-1990 | 30-06-2008 | பகுதி நேரப்பணி அரசுப்பணி (கர்ணம்) 22-02-1970 முதல் 14-11-1980 முடிய 10 வருடம் 8 மாதம் 21 நாட்கள்<br><br>2) முழு நேர அரசுப்பணி 31-12-1988 முதல் 13-07-1989 முடிய 6 மாதம் 14 நாட்கள் | 11 வருடம் 3 மாதம் 4 நாட்கள் | 5 வருடம் 7 மாதம் 17 நாட்கள் |

அலுவலக குறிப்பு:

பொருளில் காணும் விபரப்படி திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்தில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30-06-2008 பிற்பகல் முதல் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள திரு. எஸ். முருகேசன் என்பவருக்கு அன்னார் வருவாய் துறையில் கிராம கர்ணம் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட நாள் முதல் திருநெல்வேலி மாநகராட்சி பணியில் சேர்ந்த நாள் வரை உள்ள பணிமுறிவு காலத்தினை பொருட்படுத்தாது விட ஆணையாளர் ஆணை வழங்கவும், பணிமுறிவு காலங்களை தவிர்த்து அன்னார் மதிப்பூதியம் அடிப்படையில் (VAO) பணியாற்றிய பணிக்காலத்தில் பாதி பணிக்காலமான 5 வருடம், 7 மாதம், 17 நாட்களான (50%) (பொருளில் காணும் கலம் எண் 8-ல் குறிப்பிட்டுள்ளவாறு) தகுதியான பணிக்காலத்துடன் சேர்த்து ஓய்வூதிய பயன்களுக்கு எடுத்துக்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 28:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(கோப்பு எண்: சி1/2583/2008 மே.பா)

---

7) அ) இம்மாநகராட்சி நான்கு மண்டல அலுவலகங்கள், சந்திப்பு பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மை பணிகளை சுய உதவிக் குழுக்கள் மூலம் 645 நபர்கள் மாமன்ற தீர்மானம் எண் 112, நாள் 29.10.2018-ன்படி அனுமதி வழங்கப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்

மாமன்ற தீர்மான எண் 1, நாள் 05.05.2021-ன்படி மேற்படி பணியாளர்களின் பணிக்காலம் 18.06.2021 தேதியுடன் முடிவடைகிறது. மேற்படி பணியாளர்களின் பணியின் அவசியத்தை முன்னிட்டு கீழ்க்கண்டுள்ள விபரப்படி 40 சுய உதவிகுழுக்கள் மூலம் பணிபுரிந்து வரும் 645 நபர்களை 21.6.2021 முதல் 16.09.2021 வரை மேலும் 88 நாட்களுக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பணிபுரிய அனுமதிக்கவும், அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | சுய உதவிக் குழுவின் பெயர் | உறுப்பினர் களின் எண்ணிக்கை | பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வார்டு அலுவலகம் மற்றும் வார்டு/ |
|---|---|---|---|
| 1 | அக்னி சிறகுகள் சுகாதாரப் பணிக்குழு | 26 | திருநெல்வேலி வார்டு |
| 2 | அக்னி பறவைகள் சுகாதாரப் பணிக்குழு | 23 | திருநெல்வேலி வார்டு |
| 3 | தாமிரபரணி சுகாதாரப் பணிக்குழு | 20 | திருநெல்வேலி வார்டு |
| 4 | அருந்ததியர் சுகாதாரக் குழு | 25 | திருநெல்வேலி வார்டு |
| 5 | சாரா சுகாதார சுய உதவிக் குழு | 26 | திருநெல்வேலி வார்டு |
| 6 | வெண்ணிலா சுகாதாரப் பணிக்குழு | 23 | தச்சநல்லூர் மண்டலம் |
| 7 | பசுமை சுகாதாரப் பணிகுழு | 12 | தச்சநல்லூர் மண்டலம் |
| 8 | ஸ்ரீஜெயம் சுகாதார பணிக்குழு | 15 | தச்சநல்லூர் மண்டலம் |
| 9 | காந்திஜி சுகாதரப் பணிக்குழு | 11 | தச்சநல்லூர் மண்டலம் |
| 10 | ஸ்ரீ போராட்சிஅம்மன் ஆண்கள் குழு | 20 | தச்சநல்லூர் மண்டலம் |
| 11 | ஸ்ரீ உலகம்மன் சுகாதாரப் பணிக்குழு | 10 | தச்சநல்லூர் மண்டலம் |
| 12 | ஸ்ரீ முத்தாரம்மன் ஆண்கள் பணிக்குழு | 19 | தச்சநல்லூர் மண்டலம் |
| 13 | வடக்கத்தி மாரியம்மன் சுகாதாரக் குழு | 20 | தச்சநல்லூர் மண்டலம் |
| 14 | APJ. அப்துல் கலாம் ஆண்கள் குழு | 10 | தச்சநல்லூர் மண்டலம் |
| 15 | TMC 40 சுகாதார சிறப்பு பணிக்குழு | 12 | ராமையன்பட்டி உரகிடங்கு தச்சநல்லூர் மண்டலம் |
| 16 | ஸ்ரீசெல்வ விநாயகர் சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 17 | ஸ்ரீ காளியம்மன் சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 18 | தந்தை பெரியார் சுகாதாரப் பணிக்குழு | 13 | பாளை மண்டலம் |
| 19 | ஆதி சக்தி சுகாதாரப் பணிக்குழு | 13 | பாளை மண்டலம் |
| 20 | அன்னை இந்திரா மகளிர் சுயஉதவிக் குழு | 18 | பாளை மண்டலம் |
| 21 | டாக்டர் அம்பேத்கார் ஆண்கள் குழு | 23 | பாளை மண்டலம் |
| 22 | தளபதி ஓணடிவீரன் சுயஉதவிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 23 | மகாராஜா ஆண்கள் சுயஉதவிக்குழு | 15 | பாளை மண்டலம் |
| 24 | ஓம்சக்தி சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 25 | முத்தாரம்மன் சுயஉதவிக்குழு | 10 | பாளை மண்டலம் |
| 26 | ஸ்ரீ அன்னை தெரசா சுயஉதவிக்குழு | 14 | பாளை மண்டலம் |
| 27 | நேருஜி ஆண்கள் சுகாதாரக் குழு | 14 | மேலப்பாளையம் மண்டலம் |
| 28 | மங்களஈஸ்வரி பெண்கள் சுயஉதவிக்குழு | 21 | மேலப்பாளையம் மண்டலம் |
| 29 | பாரதி ஆண்கள் சுய உதவிக்குழு | 19 | மேலப்பாளையம் மண்டலம் |
| 30 | செங்கை வாஞ்சிநாதன் சுகாதாரக் குழு | 18 | மேலப்பாளையம் மண்டலம் |
| 31 | மங்கள விநாயகர் ஆண்கள் சுய உதவிக்குழு | 16 | மேலப்பாளையம் மண்டலம் |
| 32 | செந்தமிழ் மகளீர் சுய உதவிக்குழு | 10 | மேலப்பாளையம் மண்டலம் |

| | | | |
|---|---|---|---|
| 33 | சுபாஷ் சந்திரபோஸ் சுகாதாரப்பணிக்குழு | 12 | மேலப்பாளையம் மண்டலம் |
| 34 | நேதாஜி சுய உதவிக்குழு | 14 | மேலப்பாளையம் மண்டலம் |
| 35 | செம்மொழி சுய உதவிக்குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| 36 | அன்னை சத்தியா சுயஉதவிக்குழு | 15 | மேலப்பாளையம் மண்டலம் |
| 37 | அன்னை சந்தியா சுயஉதவிக்குழு | 12 | மேலப்பாளையம் மண்டலம் |
| 38 | திருப்பதி சுகாதாரக்குழு | 18 | மேலப்பாளையம் மண்டலம் |
| 39 | காளியம்மன் ஆண்கள் சுகாதாரப்பணிக்குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| 40 | தந்தை பெரியார் ஆண்கள் பணிக்குழு | 16 | மேலப்பாளையம் மண்டலம் |
| | மொத்தம் | 645 | |

ஆ) மேலும் திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டல பகுதிகளில் 8 குடியிருப்போர் நலச்சங்கமும், பாளையங்கோட்டை மண்டல பகுதியில் 10 குடியிருப்போர் நலச்சங்கமும் மேலப்பாளையம் மண்டல பகுதியில் 14 குடியிருப்போர் நல சங்கங்களிலும் 10 ஆண்டுகளாக ஒப்பந்த அடிப்படையில் நலச்சங்கங்களின் மேற்பார்வையாளரின் கீழ் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது மேற்படி நலச்சங்கங்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் 1.1.2018 முதல் ரத்து செய்யப் பட்டு மாநகராட்சி மூலம் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மாநகராட்சியில் பணியாற்றும் நிரந்தர துப்புரவு பணியாளர்களின் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு மண்டல சுகாதார அலுவலர்களால் தெரிவிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்களின் தேவைப்பட்டியலின்படி சுய உதவிக்குழு துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள ஏதுவாக தச்சநல்லூர் மண்டலத்திற்கு 19 நபர்கள் கொண்ட ஒரு சுய உதவிக்குழுவும், பாளையங்கோட்டை மண்டலத்திற்கு 15 நபர்கள் கொண்ட இரண்டு சுய உதவிக் குழுவும் மேலப்பாளையம் மண்டலத்திற்கு 16 நபர்கள் மற்றும் 17 நபர்கள் கொண்ட இரண்டு சுயஉதவிக்குழுவும் ஏற்படுத்தி மேற்படி பணியாளர்கள் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணி 01.01.2018 முதல் 88 நாட்களுக்கு மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்ற தீர்மான எண். 13 நாள்: 28.03.2018-ல் அனுமதி பெறப்பட்டு அதன்படி மேற்படி சுய உதவிக்குழுக்களின் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

மேற்படி பணியாளர்கள் பணிக்காலம் மாமன்ற தீர்மானம் எண் 1, நாள் 05.05.2021-ன் பிரகாரம் 11.6.2021 உடன் முடிவடைவதால் மேலும் 14.6.2021 முதல் 09.09.2021 வரை 88 நாட்களுக்கு மேற்படி பணியாளர்களை பணியில் ஈடுபடுத்துவதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் ஆ3/13618/2020 நாள் 26.8.2020-ன்படி தூய்மை பணியாளர்களின் ஊதியம் ரூ.388/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி ஊதியம் வழங்கவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ள நகராட்சி திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2000 ஐ பின்பற்றி குப்பையினை வீடுவீடாகச் சென்று மக்கும் மற்றும் மக்காத குப்பையாகப் பிரித்து வாங்க வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும். இம்மாநகராட்சியிலுள்ள குறைந்த எண்ணிக்கையிலான துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு மாநகரப் பகுதி முழுவதிலும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. இந்நிலையில் இக்குழுக்களைச் சேர்ந்த நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 388/- என்ற அடிப்படையில் தொகை வழங்குவதால் மாநகராட்சிக்கு ஏற்படும் செலவினம் வெகுவாக குறைகின்றது. மேலும் அரசாணை எண். 69, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ந.நி3) துறை, நாள்: 4.5.98ன் மூலம் தமிழ்நாட்டில் நகராட்சி சேவைப் பணிகளை தனியார் மயமாக்குதல் குறித்து வெளியிடப்பட்டுள்ள கொள்கைக் குறிப்பில், தனியார்மயமாக்கப்பட வேண்டிய சேவைப்பணிகளுள் திடக்கழிவு மேலாண்மையும் ஒன்று எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நிரந்தர துப்புரவு பணியாளர்கள் பணியமர்த்தினால் செலவினம் மாதம் ஒன்றுக்கு

ரூ. 1,25,00,000 ஆகும். சுய உதவிக் குழுக்களை பணியில் ஈடுபடுத்தினால் செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ. 86,60,160/- ஆகும். மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் மேற்கண்ட 45 சுய உதவிக் குழுக்களை நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.388/- என மாவட்ட ஆட்சித் தலைவரின் செ.மு.ஆணை ந.க.எண் ஆ3/13618/2020, நாள் 26.8.2020-ன்படி தின ஊதியம் அடிப்படையில் மாமன்ற தீர்மான எண் 01, நாள் 05.05.2021-ன்படி முறையே அனுமதி காலம் 23.03.2021 முதல் 18.6.2021 முடிய மற்றும் 16.03.2021 முதல் 11.6..2021 உடன் முடியவுள்ள நிலையில் அ)வில் குறிப்பிட்டுள்ள 645 சுய உதவிக் குழு துாய்மை பணியாளர்களுக்கு 21.6.2021 முதல் 16.09.2021 வரை 88 நாட்களுக்கும் ஆ)வில் குறிப்பிட்டுள்ள 99 சுய உதவிக் குழு துாய்மை பணியாளர்களுக்கு 14.6.2021 முதல் 09.09.2021 வரை 88 நாட்களுக்கும் மேற்படி சுயஉதவிக்குழு பணியாளர்களை திடக்கழிவு மேலாண்மைப் பணியில் ஈடுபடுத்தவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் ஆ3/13618/2020, நாள் 26.8.2020-ன்படி துாய்மை பணியாளர்களின் ஊதியம் ரூ.388/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி ஊதியம் வழங்கவும் அதற்காகும் மொத்த செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம். மேலும் அவசரம் அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தியமைக்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மானம் எண் 29:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(H2/7560/2017)

---

8) திருநெல்வேலி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தற்போது பாதாள சாக்கடைத் திட்டம் பயன்பாட்டில் இருந்து வரும் பகுதிகளில் பாதாள சாக்கடையில் ஆள்இறங்கு குழியில் மனித சக்திகளை வைத்து பயன்படுத்துவதை முற்றிலும் தவிர்க்கும் விதமாக மனித சக்திகளுக்கு பதிலாக முற்றிலும் இயந்திரங்களை வைத்து கையாள்வதற்கு ஏதுவாக Manhole Cleaning Robot ஒன்று கொள்முதல் செய்வதற்காக GeM Portal (Government e-Market Place) இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட தொகையை அடிப்படையாக கொண்டு ரூ.40,00,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையை இந்தியன் ஆயில்கார்ப்பரேசன் லிட், மார்க்கெட்டிங் டிவிசன், சென்னை 600 034 நிறுவனம் தனது CER-ன் கீழ் வழங்க முன்வந்துள்ளது. எனவே மேற்படி மதிப்பீடு தொகை ரூ.40,00,000/-க்கு மாமன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக் குறிப்பு:

பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தற்போது பாதாள சாக்கடைத் திட்டம் பயன்பாட்டில் இருந்து வரும் பகுதிகளில் பாதாள சாக்கடையில் ஆள்இறங்கு குழியில் மனித சக்திகளை வைத்து பயன்படுத்துவதை முற்றிலும் தவிர்க்கும் விதமாக மனித சக்திகளுக்கு பதிலாக முற்றிலும் இயந்திரங்களை வைத்து கையாள்வதற்கு ஏதுவாக Manhole Cleaning Robot ஒன்று கொள்முதல் செய்வதற்காக GeM Portal (Government e-Market Place) இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட தொகையை அடிப்படையாக கொண்டு ரூ.40,00,000/-க்கு தயார் செய்யப்பட்டு மதிப்பீடு தொகைக்கும், மேற்படி தொகையை இந்தியன் ஆயில்கார்ப்பரேசன் லிட், மார்க்கெட்டிங் டிவிசன், சென்னை 600 034 நிறுவனம் தனது CER-ன் கீழ் வழங்க முன்வந்துள்ளதை ஏற்றும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 30:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(இ3/5492/2020)

---

9) அ) திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டல அலுவலகத்திற்கு உட்பட்ட பேட்டை நவீன கட்டண கழிப்பிடம் மற்றும் டவுண் கூலக்கடை பஜார் நவீன கட்டண கழிப்பிடத்தில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூலிக்கும் உரிமத்தினை அரசாணை நிலை எண் 78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 25.05.2009-ன்படி ஒப்படைக்கும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு அனுபவிக்கும் உரிமத்தனை திரு.கனகசபாபதி என்பவருக்கு மாமன்ற தீர்மானம் எண் 4 மற்றும் 5, நாள் 14-02-2018-ன்படி 05-12-2017 முதல் 04-12-2020 முடிய காலத்திற்கு அனுபவிக்கும் உரிமம் வழங்கப்பட்டது. மேற்கண்ட இரண்டு நவீன கட்டண கழிப்பிடங்களுக்கும் 3 ஆண்டுகளுக்கான உரிம காலம் 04.12.2020-ல் முடிவடைந்தது.

மேற்காணும் இரு உரிம இனங்களையும் நடத்தி வந்த உரிமதாரரான திரு. கனகசபாபதி என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண் W.P (MD) No of 15537/ 2020 and W.P,(MD) No 15327 of 2020-ல் தொடர்ந்த வழக்கில் கொரோனா தொற்று காரணமாக உரிம காலத்தை நீட்டித்து வழங்கக் கேட்டு வழக்கு தொடரப்பட்டு கீழ்கண்டவாறு தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது.

The respondents shall consider the petitioner representations dated 14.08.2020 and 04.09.2020 seeking for extension of the lease period by another the period of 110 days due to the non enjoyment of lease during the period of lockdown from 24.03.2020 till 30.06.2020 on merits and in accordance with law and pass final orders within a period four weeks from the date of receipt of a copy of this order.

மேற்கண்ட தீர்ப்பின்படியும் ஆணையாளர் திருநெல்வேலி மாநகராட்சி அவர்களது ஆணை நாள் 02.12.2020 ன் படியும் மேற்கண்ட இரண்டு நவீன கட்டண கழிப்பிடங்களுக்கு உரிமதாரர் திரு. கனகசபாபதி என்பவருக்கு 04.12.2020 முதல் 31.03.2021 வரை உரிம காலம் நீட்டிப்பு செய்து உரிம ஆணை வழங்கப்பட்டது.

மேலும் 26-02-2021 முதல் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2021 நன்னடத்தை விதி அமலில் இருந்த நிலையில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத காரணத்தினால் ஆணையாளர் அவர்களது ஆணை நாள் 08.03.2021-ன்படி மேலும் 01.04.2021 ம் தேதி முதல் 31.05.2021 வரை கீழ்கண்டவாறு நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகையில் 5% உயர்வு செய்து விகிதாச்சார அடிப்படையில் இரண்டு மாத உரிமத் தொகை நிர்ணயம் செய்து உரிமம் அனுபவிக்கும் காலம் நீட்டிப்பு செய்து ஆணை வழங்கப்பட்டது.

| வ.எண் | உரிம இன விபரம் | நிர்ணயிக்கப்பட்ட உரிமத்தொகை |
|---|---|---|
| 1. | பேட்டை நவீன கட்டண கழிப்பிடம் | ரூ. 20,085 /- (மாதம் ஒன்றிற்கு) |
| 2. | கூலக்கடை பஜார் நவீன கட்டண கழிப்பிடம் | ரூ. 18,000 /- (மாதம் ஒன்றிற்கு) |

அதனை தொடர்ந்து தொடர்ச்சியாக Covid–19 கொரோனா தொற்று இரண்டாவது அலையின் காரணமாக தமிழகம் முழுவதும் முழு ஊரடங்கு அமுலில் இருந்த காரணத்தினால் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத நிலையில் ஆணையாளர் அவர்களது ஆணை நாள் 24.05.2021-ன்படி மேலும் ஒரு மாத காலம் அதாவது 01.6.2021 முதல் 30.06.2021 ம் தேதி வரை உரிம காலம் நீட்டிப்பு செய்து உரிம ஆணை வழங்கப்பட்டு உரிமதாரரால் உரிமத்தொகை 30-06-2021 முடிய செலுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் காரணங்களை முன்னிட்டு 04-12-2020 முதல் 30-06-2021 முடிய திரு.கனகசபாபதி என்பவருக்கு மேற்காணும் இரு நவீனக் கட்டணக் கழிப்பிடங்களுக்கும் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிம காலத்தை நீட்டிப்பு செய்து வழங்கியமைக்கு மாமன்றத்தின் பின்னேற்பு வழங்குவது குறித்து பார்வைக்கும் முடிவிற்கும்.

ஆ) தற்போது முழு ஊரடங்கு தளர்வு செய்யப்பட்ட நிலையில் மேற்கண்ட இரண்டு நவீன கட்டண கழிப்பிடத்திற்கு உரிம காலம் 30.06.2021-ம் தேதி முடிவடைவதால்,

23.06.2021-ம் தேதி பொது ஏல / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் விபரம் வருமாறு :

பேட்டை நவீன கட்டண கழிப்பிடம் :
நிர்ணயம் செய்யப்பட்ட குறுமத்தொகை ரூ.2,41,000/-

பேட்டை நவீன கட்டண கழிப்பிடத்திற்கு குறுமத்தொகையாக ரூ.2,41,000/- நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால் மேற்கண்ட பேட்டை நவீன கட்டண கழிப்பிடத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் யாரும் கலந்து கொள்ளவில்லை.

30-06-2021-க்குள் மறு ஏல/ஒப்பந்தபுள்ளி கோர போதிய கால அவகாசம் இல்லாத நிலையிலும் இவ்வினத்தை துறை வசம் கையகப்படுத்தி துறை வசூல் மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினாலும் மேற்கண்ட பேட்டை நவீன கட்டண கழிப்பிடத்திற்கு தற்போதைய உரிமதாரரான திரு.ஆர்.கனகசபாபதி என்பவருக்கு மேலும் 01.07.2021 முதல் 31.07.2021 வரை உரிம காலத்தை நீட்டிப்பு செய்து வழங்குவது குறித்து மாமன்றத்தின் அனுமதிக்கும், முடிவுக்கும்

இ) டவுண் கூலக்கடை பஜார் நவீன கட்டண கழிப்பிடத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.

நிர்ணயம் செய்யப்பட்ட குறும தொகை : ரூ.2,16,000/-

மேற்கண்ட உரிம இனத்திற்கு ஏலத்தில் ஒரு நபரும் ஒப்பந்தப்புள்ளியில் இரு நபர்களும் கலந்து கொண்டனர். அதன் விபரம் வருமாறு:

ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் விபரம்:

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | வைப்பு தொகை ரூ | கூடுதல் வைப்பு தொகை ரூ | ஏல உச்சக்கேள்வி |
|---|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.பொன்னு சுடலை, த-பெ. எம்.ரெங்கன், 29-35 காமராஜ் காலனி, சமாதானபுரம் பாளையங்கோட்டை | Deposit Amount: Rs. 47500/- Central Bank Of India, D.D.No. 169348. Dated 23.06.2021 | Addl.Deposit Amount: Rs. 47500/- Central Bank Of India, D.D.No. 169347. Dated 23.06.2021 | Rs.2,81,000/- |

ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் விபரம்:

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | வைப்பு தொகை ரூ | கூடுதல் வைப்பு தொகை ரூ | ஏல கேள்வி |
|---|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.கனகசபாபதி, த-பெ.ராகவன் 44-1 காவல் பிறை தெரு, திருநெல்வேலி டவுண் | Deposit Amount: Rs.47500/- Canara Bank D.D.No. 555170. Dated 21.05.2021 | Addl.Deposit Amount: Rs.47500/- Canara Bank. D.D.No. 555175 Dt. 21.05.2021 | Rs.2,20,000/- |
| 2 | திருமதி.கே.லெட்சுமி, 43 காவல் பிறை தெரு திருநெல்வேலி டவுன் | Deposit Amount: Rs 47500/- Canara Bank | Addl.Deposit Amount: Rs.47500/- Canara Bank. | Rs.2,25,500/- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | D.D.No.555168<br>Dated 21.05.2021 | D.D.No. 555169<br>Dated 21.05.2021 | |

மேற்படி கூலக்கடை பஜார் நவீனக் கட்டணக் கழிப்பிடத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்ட குறுமத் தொகை ரூ.2,16,000/- ஆகும். பொது ஏலத்தில் கலந்து கொண்ட திரு.பொன்னு சுடலை என்பவரின் உச்ச ஏலக் கேள்வி ரூ.2,81,000/- ஆகும். இந்த ஏல உச்சக் கேள்வியானது குறும தொகையினை விட 65,000/- கூடுதலாகவும் கடந்த ஆண்டு ஏலத் தொகையினைவிட ரூ.93,575 கூடுதலாகவும் (187425-281000) திருமதி.K.லெட்சுமி என்பவரது ஒப்பந்தப்புள்ளி தொகையினை விட ரூ.55,500/- கூடுதலாகவும் உள்ளதால் மேற்படியாரின் உச்ச ஏலக் கேள்வித் தொகை ரூ.2,81,000/-ஐ ஏற்று திரு.பொன்னுசுடலை என்பவருக்கு டவுண் கூலக்கடை பஜார் நவீன கட்டண கழிப்பிடத்தில் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தை ஒப்படைக்கும் நாள் முதல் 3 ஆண்டு காலத்திற்கு அனுபவிக்கும் உரிமத்தினை வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவுக்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) பொருளில் குறிப்பிட்டுள்ள பேட்டை நவீன கட்டண கழிப்பிடம் மற்றும் திருநெல்வேலி டவுண் கூலக்கடை பஜார் கட்டண கழிப்பிடங்களுக்கு 04-12-2020 முதல் 30-06-2021 முடிய உரிம காலத்தை நீட்டிப்பு செய்து வழங்கியமைக்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

ஆ) பேட்டை நவீன கட்டண கழிப்பிடத்திற்கு 23-06-2021 ஏலம் / ஒப்பந்தப் புள்ளியில் யாரும் கலந்து கொள் வில்லை. ஏற்கனவே இவ்வுரிம இனத்தை நடத்தி வரும் உரிமதாரர் திரு. கனகசபாபதி என்பவருக்கு மேலும் 01-07-2021 முதல் 31-07-2021 வரை உரிம காலத்தை நீட்டிப்பு செய்து வழங்குவது குறித்து மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

இ) திருநெல்வேலி டவுண் கூலக்கடை பஜார் நவீன கட்டண கழிப்பிடத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு உச்ச ஏல கேள்வி கேட்டுள்ள திரு.பொன்னுசுடலை என்பவர் ஏல உச்சக்கேள்வி தொகை ரூ.2,81,000/- (இரண்டு இலட்சத்து என்பத்து ஒன்றாயிரம் மட்டும்) ஐ ஏற்று அன்னாருக்கு மேற்படி உரிமத்தை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு அனுபவிக்கும் உரிமத்தினை வழங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 31:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(ந.க.எண் 2560/2017/அ1-திலி)

---

10) திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலப் பகுதிக்குட்பட்ட மத்திய பேருந்து நிலையத்தில் 15 தொலைக்காட்சி பெட்டிகள் வைத்து விளம்பரம் செய்யும் வகைக்கு செலுத்திய வைப்புத் தொகையில் நிறுத்தம் செய்யப்பட்ட 40% தொகை ரூ.18,000/-ஐ திரு.த.ஆறுமுகம் என்பவருக்கு வழங்க மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்காகவும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலப் பகுதிக்குட்பட்ட மத்திய பேருந்து நிலையத்தில் 15 தொலைக்காட்சி பெட்டிகள் வைத்து விளம்பரம் செய்யும் வகைக்கு திரு.த.ஆறுமுகம் என்பவரால் செலுத்திய வைப்புத் தொகையில் நிறுத்தம் செய்யப்பட்ட 40% தொகை ரூ.18,000/- தச்சநல்லூர் மண்டல அலுவலகம் காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடு 2017-18-ல் இருப்பில் உள்ளது. மூன்று ஆண்டுகளுக்கு மேலாகி காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/-க்கு மேல் உள்ளதால் நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)( i)(iii)-ன்படி மேற்படி தொகை ரூ.18,000/-ஐ திரு.த.ஆறுமுகம் என்பவருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 32:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(கோப்பு எண் அ1/643/209-தச்சை)

---

11) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம் வார்டு எண் 27, ஆசிரியர் குடியிருப்பு மீட்பர் நகர் முதல் தெரு பகுதியில் ஏற்கனவே அமைந்துள்ள 4 எண்ணம் மின்கம்பங்களில் 4 எண்ணம் தெருவிளக்கு இணைப்பு வயர்கள்அமைத்து 4 எண்ணம் 20 W LED தெருவிளக்கு பொருத்திடவும், தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) பகிர்மான கழகத்திற்கு செலுத்த வேண்டிய செலவுத் தொகை சேர்த்து மொத்தம் உத்தேச செலவினத் தொகை ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) செலவாகும். மாமன்ற ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

மேற்கண்ட பொருளில் குறிப்பிட்டுள்ள இடங்களில் ஏற்கனவே அமைந்துள்ள 4 எண்ணம் மின்கம்பங்களில் 4 எண்ணம் தெருவிளக்கு இணைப்பு வயர்கள்அமைத்து 4 எண்ணம் 20 W LED விளக்குகள் பொருத்திடவும் ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்)-க்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 33:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(இ1/2807/2021-மே.பா.)

---

12) திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டல அலுவலக பாளை பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள வணிக வளாக கட்டிடத்தினை இடித்து சீர்மிகு நகர (Smart City) திட்டத்தின்கீழ் புதிய வணிக வளாக கட்டிடங்கள் கட்டப்பட உள்ளது. அதன் பொருட்டு வணிக வளாக கடைகளை காலி செய்வது அவசியமாகின்றது.

எனவே தற்போது மேற்கண்ட பாளை பேருந்து நிலைய வளாகத்தில் அமைந்துள்ள 60 கடைகளுக்கு பதிலாக கீழ்கண்ட விபரப்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட தற்காலிக கடைகளுக்கு கடை வாடகை நிர்ணயம் செய்யப்படுகின்றது.

1. நூற்றாண்டு மண்டபம் எதிரில் உள்ள கடைகள் (10X8 = 80 ச.அ)
2. ஜான்ஸ் கல்லூரி சாலை கடைகள் (10X8 = 80 ச.அ)
3. சரோஜினி பூங்கா கடைகள் (10X8 = 80 ச.அ)
4. சரோஜினி பூங்கா அருகில் உள்ள் திரு. ராதாகிருஷ்ணன என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கடை மட்டும் (கடை எண் 15) : (27X8 = 216 ச.அ) (17X9 = 153 ச.அ) மொத்தம் 369 ச.அ.

மேற்காணும் விபரப்படி தற்காலிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கடைகளுக்கு வ.எண் 1 முதல் 3 வரை உள்ள 80 ச.அ உள்ள கடைகளுக்கு மாத வாடகையாக ரூ.2000/- வீதமும் வ.எ.4-ல் உள்ள (கடை எண்.15) 269 ச.அ கொண்ட கடைக்கு மட்டும் மாத வாடகையாக ரூ.9000/- எனவும் 01.10.2020 முதல் நிர்ணயம் செய்தும் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு தற்காலிகமாக ஒதுக்கீடு செய்திடவும் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

- இந்த ஒதுக்கீடு ஆணை பாளை பேருந்து நிலையத்தில் புதிய கட்டுமானப்பணிகள் முடிவுற்று, பயன்பாட்டிற்கு வரும் நாள் வரையில் மட்டுமே செல்லத்தக்கதாகும்.

- தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மாற்று கடைக்கு விதிகளின்படி நிர்ணயிக்கப்பட்ட மாத வாடகை தொகையினை பிரதிமாதம் 10-ம் தேதிக்குள் செலுத்தப்படவேண்டும். வாடகையானது மூன்று மாதங்களுக்கு மேல் செலுத்தப்படாமலிருப்பின் இந்த ஒதுக்கீடு ஆணையானது ரத்து செய்யப்படும்.

- ஒதுக்கீடு செய்யப்படட இடத்தில் நிரந்தர கட்டுமானம் எதுவும் ஏற்படுத்தாததோடு நிர்ணயிக்கப்பட்ட அளவுகளுக்கு மாறாக எவ்வித ஆக்கிரமிப்பும் செய்தல் கூடாது. அவ்வாறு ஆக்கிரமிப்பு கண்டறியப்பட்டால் எவ்வித முன்னறிவிப்புமின்றி இந்த ஒதுக்கீடு ஆணை ரத்து செய்யப்படும்.

- மாற்று கடையானது ஒதுக்கீடு செய்யப்பட்ட நபரால் மட்டுமே நடத்தப்பட்டு வர வேண்டும். தவிர மாற்று நபருக்கு கடையினை உள்ஒதுக்கீடு செய்தாலோ, மாற்றி வழங்கினாலோ இந்த ஒதுக்கீடானது ரத்து செய்யப்படும்.

- ஒதுக்கீடு செய்யப்பட்ட மாற்று கடைக்கு ஆணையாளர், திருநெல்வேலி மாநகராட்சி பெயரில் மின் இணைப்பு பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். கடைகளில் விற்பனை செய்யப்படும் உணவு பொருட்கள் சுகாதாரமான முறையில் பேணப்பட வேண்டும்.

- மாற்று கடை ஒதுக்கீடு செய்யப்பட்ட இடமானது மாநகராட்சி வளர்ச்சி பணிக்கு தேவைப்படும் பட்சத்தில் எவ்வித மறுப்புமின்றி மாநகராட்சியிடம் ஒப்படைப்பு செய்திடல் வேண்டும். கட்டுமானப் பணி முடிவுற்று பயன்பாட்டிற்கு வந்தவுடன் இவ்வாணை தானாகவே காலாவதியாகிடும்.

- தாங்கள் ஏற்கனவே நடத்தி வந்த கடைக்கான வாடகை நிலுவைத் தொகை முழுவதும் இவ்வாணை பெறப்பட்ட 30 தினங்களுக்குள் செலுத்தப்பட வேண்டும். தவறின் இவ்வாணை தானாகவே காலாவதியாகிவிடும்.

அலுவலக குறிப்பு

பொருளில் கண்டுள்ளவாறு திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டல அலுவலகத்திற்குட்பட்ட பாளை பேருந்து நிலை வணிக வளாக கடைகள் சீர்மிகு நகர மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ் கட்டுமான பணிகள் நடைபெற உள்ளதால் அதற்கு பதிலாக அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கடைகளுக்கு மாத வாடகையாக

1) நூற்றாண்டு மண்டபம் எதிரில் உள்ள கடைகள் (10X8 = 80 ச.அ) - ரூ.2000/-
2) ஜான்ஸ் கல்லூரி சாலை கடைகள் (10X8 = 80 ச.அ) - ரூ.2000/-
3) சரோஜினி பூங்கா கடைகள் (10X8 = 80 ச.அ) - ரூ.2000/-
4) சரோஜினி பூங்கா அருகில் உள்ள திரு. ராதாகிருஷ்ணன் என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கடை மட்டும் (கடை எண் 15) (27X8 = 216 ச.அ) (17X9 = 153 ச.அ) மொத்தம் 369 ச.அ. - ரூ.9000/-

மேற்கண்ட விபரப்படி கடை வாடகை நிர்ணயம் செய்திட மாமன்றம் பரிசீலித்து முடிவ செய்யலாம்.

தீர்மானம் எண் 34:

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்படுகிறது

(அ1 /6557 /2020-பாளை)

---